செய்தி வெளியீடு எண்.15 நாள்.06.01.2017

# திருவள்ளூர் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததை தொடர்ந்து வரட்சியால் பதிக்கப்பட்ட விவசாய நெற்பயிர்களை பயிரிடப் பகுதிகளை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததை தொடர்ந்து வரட்சியால் பதிக்கப்பட்ட விவசாய நெற்பயிர்களை பயிரிடப் பகுதிகளை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் ஆகியோர் இன்று (06.01.2017) நேரில் பார்வையிட்டு களநிலை உண்மை அறியும் ஆய்வு மேற்கெண்டனர்.

மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம் காட்டூர், தொட்டிமேடு, செலியம்பேடு, பூங்குளம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் ஓபசமுத்திரம், சுண்ணாம்புகுளம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் வடமதுரை, ஆலப்பாக்கம், கல்பட்டு, பூண்டி ஊராட்சி ஒன்றியம் வேலகாபுரம், மெய்யூர், பூண்டி ஆகிய பகுதிகளை நேரடியாக பார்வையிட்டு விவசாயிகளை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர்.

மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது திருவள்ளூர் மாவட்டத்தில் 58 சதவீதம் மழை குறைவாக பொய்துள்ளது. எனவே போதிய நீர் ஆதாரம் கிடைக்கப்பெறவில்லை. மாநில அரசு 500 கோடி நிதி ஒதிக்கீடு செய்து அனைத்து விதமான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்கனவே வார்தா புயல் மாவட்டத்தில் 49 கோடி நிவாரணம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அனைத்து விவசாயிகளுக்கும், வீடுகள் சேதமடைந்தவர்களுக்கும் உரிய இழப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. களநிலை உண்மை அறியும் பணிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு அறிக்கை வழங்கப்படும் என்று கூறினார்.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க வரட்சி பாதிப்பினை களநிலை உண்மை அறியும் பணிகள் மூலம் 10 சதவிதம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கையாக வழங்கப்படும். அதன் மூலம் துரிதமாக நிவாரண உதவிகளை மத்திய அரசிடமிருந்து பெறுவதர்காக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கண்காணிப்பு அலுவலர்/முதன்மை செயலர் பொது பணித்துறை திரு.எஸ்.கே.பிரபாகர்,இ.ஆ.ப.,அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப.,அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன் (பொன்னேரி), திரு.கே.எஸ்.விஜய குமார் (கும்மிடிப்பூண்டி) மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~